வளர்தமிழ் இயக்கம்
Tamil Language Council

**செவ்வாய்க்கிழமை, 14 மார்ச் 2023, மாலை 4 மணிக்கு முன்னதாக வெளியிடத் தடை விதிக்கப்பட்டுள்ளது**
***வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளவை தவிர்த்து***

**தமிழ் மொழியை வளர்க்க**
**புத்துணர்வுடன் புதுமுனைப்புகள்**

தமிழ் மொழி விழா 2023 மாபெரும் நிகழ்வின் புதிய கருப்பொருளாக '*அழகை*' படைப்பதில் வளர்தமிழ் இயக்கம் மகிழ்ச்சி அடைகிறது. தமிழ் மொழி விழா 2023-க்கு சமூகம் விரும்பும் கருப்பொருளை நிர்ணயிப்பதற்காக நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்புக்குப் பிறகு இந்தக் கருப்பொருள் தீர்மானிக்கப்பட்டது. சென்ற 2020-ல் இருந்து மூன்று விழாக்கள் மெய்நிகர் வடிவில் படைக்கப்பட்டதைத் தொடர்ந்து, கிருமிப்பரவல் கட்டுப்பாடுகளிலிருந்து சிங்கப்பூர் விடுபட்டிருப்பதால், இந்த ஆண்டு பெரும்பாலான நிகழ்ச்சிகள் நேரடியாகப் படைக்கப்படுகின்றன.

விழாவை முன்னிட்டு நிகழ்த்தப்படும் அனைத்து நிகழ்ச்சிகளும் '*அழகு*' என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். தமிழ் மொழியின் வளம், மகத்துவம், அழகு அனைத்தையும் எடுத்துக்காட்ட பங்காளிகள் அனைவரும் எடுக்கும் கூட்டு முயற்சியை வளர்தமிழ் இயக்கம் ஒருங்கிணைப்பதற்கு இது வழிகோலுகிறது.

'*அழகை*' பிரதிநிதிக்க, அழகையும் நயத்தையும் குறிக்கும் மயிலிறகு இந்த ஆண்டின் முக்கிய வடிவச்சின்னத்தில் இடம்பெற்றுள்ளது. இறகின் அடித்தண்டிலிருந்து தொடர்ச்சியான நீண்ட கோடாக சிங்கப்பூரின் வான்விளிம்பும், புத்தகம் வாசிப்பதிலும் உரையாடுவதிலும் சமூகம் ஈடுபட்டுள்ளதைக் காட்டும் காட்சிகளும் புதுவிதமாக வரையப்பட்டுள்ளன. இந்த வடிவச்சின்னம், தமிழ் மொழியை வளர்க்கும் நாடளாவிய இயக்கமாக வளர்தமிழ் இயக்கத்தைப் படைத்துக் காட்டுகிறது.

"தமிழ் மொழியில் பேசவும் தமிழைப் பயன்படுத்தவும் சமூகத்திலுள்ள இளையர்களைக் குறிப்பாக ஈடுபடுத்துவதற்கு வளர்தமிழ் இயக்கம் அதிக முக்கியத்துவம் தருகிறது. இந்த முயற்சியை விரிவுபடுத்த, சிங்கப்பூரிலுள்ள தமிழ் பேசும் மக்களை எட்டுவதற்கும் அவர்களை ஈடுபடுத்துவதற்கும் வளர்தமிழ் இயக்கம் முனைப்புடன் முயற்சி எடுத்துள்ளது," என்கிறார் வளர்தமிழ் இயக்கத்தின் தலைவர் திரு எஸ் மனோகரன்.

"தங்களுக்கு விருப்பமான கருப்பொருளுக்கும் உருவச்சின்ன வடிவத்திற்கும் ஆர்வத்துடன் வாக்களித்த பொதுமக்களுக்கு எங்களின் நன்றி. நமது தமிழ் மொழியை சமூகம் போற்றிப் பாராட்ட ஆதரவளிக்கும் முனைப்புகளைச் செயல்படுத்த கடுமையாக உழைக்கும் வளர்தமிழ் இயக்கத்திற்கு அனைவரும் தொடர்ந்து ஆதரவளிப்பார்கள் என்று நம்புகிறோம். சென்ற ஆண்டின் 'புத்தாக்கம்' கருப்பொருளிலிருந்து 'அழகு' என்ற கருப்பொருளுக்கு மாறியிருக்கும் இவ்வாண்டு விழாவில், நமது பங்காளிகள் படைப்பாற்றலுடன் படைக்கவிருக்கும் நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கிறோம்," என்றும் அவர் கூறினார்.

தமிழ் மொழி விழா 2023 நிகழ்வின் முக்கிய வடிவச்சின்னத்தைப் பின்னிணைப்பு A-ல் காணலாம்.

**தமிழ் மொழி விழா அதிகாரபூர்வத் தொடக்க நிகழ்ச்சிக்கு அனைவரும் வரவேற்கப்படுகின்றனர்**

இந்த ஆண்டின் தமிழ் மொழி விழா, 2023 ஏப்ரல் 1 முதல் 30 வரை நடைபெறுகிறது. தமிழ் மொழி விழா 2023 அதிகாரபூர்வத் தொடக்க நிகழ்ச்சி, சனிக்கிழமை, 1 ஏப்ரல் 2023 அன்று, மீடியாகார்ப் அரங்கத்தில் இரவு 9 மணிக்கு அரங்கேறுகிறது. வசந்தம் ஒளிவழியிலும் மீவாட்ச் ஊடகத்தளத்திலும் “நேரடியாக” ஒளிபரப்பாகவிருக்கும்.

இந்த ஆண்டு, தமிழ் மொழி விழா 2023 அதிகாரபூர்வத் தொடக்க நிகழ்ச்சிக்குப் பொதுமக்களும் வருகை அளிக்கலாம். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நுழைவுச்சீட்டுகள், திங்கட்கிழமை, 20 மார்ச் 2023 அன்று பிற்பகல் 3 மணிக்கு Peatix-ல் வெளியிடப்படும். இந்த “நேரடி” நிகழ்ச்சியை நேரில் காண, https://tlf2023launch.peatix.com/ இணையத்தளத்தில் நுழைவுச்சீட்டுக்குப் பதிவு செய்யுங்கள்.

**தமிழ் மொழி விழா 2023**

இந்த ஆண்டின் தமிழ் மொழி விழாவில் 43 பங்காளிகள் படைக்கும் 42 நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. தமிழ்ச் சமூகம் ஒன்றிணைந்து பல்வேறு வகையான இலக்கிய, சொற்பொழிவு, கலை, கலாசார நிகழ்ச்சிகளைப் படைக்கின்றன. அனைவரும் “தமிழை நேசித்து, தமிழில் பேசவும்”, தாய்மொழியை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தி வளர்க்கவும் இந்நிகழ்ச்சிகள் ஊக்கமளிக்கின்றன.

தமிழ் மொழி விழாவுக்குப் புதிய பங்காளிகளின் ஆதரவு தொடர்ந்து கிடைத்து வருகிறது. சமூகத்தின் வெவ்வேறு ஆர்வங்களுக்கும் பிரிவுகளுக்கும் உகந்த நிகழ்ச்சிகளை அவர்கள் நடத்துகின்றனர்.

தமிழ் முரசு உயர்கல்வி மாணவர்களுக்காக ஒரு நாள் மொழிபெயர்ப்புப் பயிலரங்கையும் செய்தியறை சுற்றுலாவையும் நடத்துகிறது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்போர் தங்களது மொழிபெயர்ப்புத் திறன்களை வளர்த்துக் கொள்வதோடு, செய்திப் படைப்புகளில் மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது என்பது பற்றியும் தெரிந்து கொள்வார்கள்.

VK ஆர்ட்ஸ் அமைப்பு, *சம்நிதி – குருந்தொகை காலத்திலிருந்து – மறுபார்வை* என்ற தலைப்பிலான நாட்டிய நிகழ்ச்சியைப் படைக்கிறது. இந்நிகழ்ச்சி, அக்கால இசையுடன் நவீனகால இசையை ஒன்றிணைத்து, அன்பு, நட்பு, கலாசாரம் ஆகியவற்றை நாட்டியம்வழி படைக்கிறது. அதே சமயத்தில், சங்கக் கால மக்களின் வாழ்க்கைமுறையை அடிப்படையாகக் கொண்ட குருந்தொகை கவிதைகளின் அர்த்தத்தையும் அழகையும் வெளிப்படுத்துகிறது.

கேலாங் செராய் இந்தியர் நற்பணிச் செயற்குழு பட்டிமன்ற நிகழ்ச்சியைப் படைக்கிறது. பேச்சுத்திறனுக்கும் அறிவுக்கூர்மைக்கும் இடையிலான இந்த விவாதத்தில் நகைச்சுவைக்கும் பஞ்சமிருக்காது. பேச்சாளர்கள் பல்வேறு சுற்றுகளில் சிங்கப்பூர் மற்றும் நமது உள்ளூர் கலாசாரம் தொடர்பான தலைப்புகளில் விவாதிப்பார்கள்.

தமிழ் மொழி விழா 2023 நிகழ்ச்சிகளின் முழுமையான விவரங்களுக்கு, வளர்தமிழ் இயக்கத்தின் facebook.com/tamillanguagecouncilsinsingapore ஃபேஸ்புக் பக்கத்திற்குச் செல்லுங்கள் அல்லது @TamilLangFestival இன்ஸ்டாகிராம் பதிவுகளைப் பின்தொடருங்கள் அல்லது www.tamil.org.sg இணையத்தளத்தை நாடுங்கள்.

**தமிழ் மொழி விழா உருவச்சின்னம் வடிவமைக்கும் போட்டி**

தமிழ் மொழி விழாவையும், சிங்கப்பூரில், குறிப்பாக இளைய தலைமுறையினரிடையில், தமிழ் மொழிப் பயன்பாட்டையும் வளர்ப்பதற்காக, வளர்தமிழ் இயக்கம் 2022 டிசம்பர் மாதத்தில் உருவச்சின்னம் வடிவமைக்கும் போட்டிக்கு ஏற்பாடு செய்தது. ஒரு மாதகாலம் நீடித்த இந்தப் போட்டிக்குப் பொதுமக்களிடமிருந்து கிட்டத்தட்ட 40 சமர்ப்பிப்புகள் கிடைத்தன. நீதிபதிக் குழுவினரின் மதிப்பீட்டுக்குப் பிறகு, பொது வாக்கெடுப்புக்கு மூன்று சமர்ப்பிப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றுள், திரு ஜே எஸ் சசிகுமாரின் *அன்பு* வடிவம் ஆக அதிகமான வாக்குகளைப் பெற்றது.

ஏற்கப்பட்ட உருவச்சின்னம், தமிழ் மொழி விழாவின் அதிகாரபூர்வத் தொடக்க நிகழ்ச்சியில் அறிமுகப்படுத்தப்படும். உருவச்சின்னங்களின் இறுதி வடிவத்தைப் பின்னிணைப்பு B-ல் காணலாம். **பின்னிணைப்பு B-ல் உள்ள தகவல்கள், படங்கள் அனைத்தையும் சனிக்கிழமை, 1 ஏப்ரல் 2023, இரவு 11 மணிக்கு முன்னதாக வெளியிடக்கூடாதென தடை விதிக்கப்பட்டுள்ளது.**

**தமிழ் வாழ்த்துப் பாடல் எழுதும் போட்டி**

தமிழ் வாழ்த்துப் பாடல் தமிழைப் போற்றும் பாடல். பாரதியார் என்றறியப்படும் தமிழ்க் கவிஞர் மகாகவி சுப்ரமணிய பாரதி இப்பாடலை எழுதினார். வளர்தமிழ் இயக்கம், சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தின் தமிழ்மொழி ஆர்வத்தையும், தமிழ்ப் பயன்பாட்டில் அவர்களுக்குள்ள தன்னம்பிக்கையையும் எடுத்துக்காட்டக்கூடிய ஒரு தமிழ் வாழ்த்துப் பாடலைத் தயாரிக்க விரும்புகிறது.

இதற்காக, தமிழ் வாழ்த்துப் பாடல் எழுதும் போட்டிக்கு வளர்தமிழ் இயக்கம் ஏற்பாடு செய்யும். பொதுமக்கள் நமது உள்ளூர் சூழலுக்குப் பொருந்தும் தமிழ் வாழ்த்துப் பாடலை எழுதி அனுப்பி வைக்க அழைப்பு விடுக்கப்படும்.

தமிழ் வாழ்த்துப் பாடல் எழுதும் போட்டி பற்றிய மேல்விவரங்களை, பின்னிணைப்பு C-ல் காணலாம். **பின்னிணைப்பு C-ல் உள்ள தகவல்கள் அனைத்தையும் சனிக்கிழமை, 1 ஏப்ரல் 2023, இரவு 11 மணிக்கு முன்னதாக வெளியிடக்கூடாதென தடை விதிக்கப்பட்டுள்ளது.**

~~~

**வளர்தமிழ் இயக்கம், தமிழ் மொழி விழா பின்னணி விவரம்**

வளர்தமிழ் இயக்கம் 2000ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. கல்வித் துறை, முக்கிய சமூக அமைப்புகள், கலைக் குழுக்கள், ஊடகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இதில் அங்கம் வகிக்கின்றனர். இந்த உறுப்பினர்கள் அனைவருமே கலாசார, சமூக, இளையர் அமைச்சால் நியமிக்கப்பட்டவர்கள்.
~~~

வளர்தமிழ் இயக்கம் 2**07**ஆம் ஆண்டிலிருந்து பங்காளி அமைப்புகளுடன் சேர்ந்து தமிழ் மொழி விழாவுக்கு ஏற்பாடு செய்து வருகிறது. தமிழ்ச் சமூகத்தின் முக்கிய நிகழ்வாக இவ்விழா திகழ்கிறது. விழாவுக்குச் செல்வோரும் சமூகமும் தாய்மொழியை நேசிக்கவும் பேசவும் ஊக்கம் கொடுக்கும் இலக்கிய, சொற்பொழிவு, கலாசார நிகழ்ச்சிகளைப் படைக்க, இத்தனை ஆண்டுகளாக ஏகப்பட்ட பங்காளிகளுடன் கூட்டிணைந்து செயல்பட்டு வருகிறது.

வளர்தமிழ் இயக்கத்தின் பிரதான விழாவாகத் தமிழ் மொழி விழா நீடிக்கிறது. இந்நிலையில், இளையர்கள் தாய்மொழியை நேசிக்கவும் பேசவும் ஊக்கம் கொடுக்கும் தனியொரு முனைப்பாக, 2021ல் தமிழ் இளையர் விழாவையும் வளர்தமிழ் இயக்கம் அறிமுகப்படுத்தியது.

2017 முதல், இளையர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஆற்றலை வளர்க்கும் முனைப்புகளுக்கு ஆதரவளிக்க வளர்தமிழ் இயக்கம் கூடுதல் நிதி வழங்கி வருகிறது. இளையர்களும் மாணவர்களும் தமிழ் மொழியைப் பயன்படுத்தவும் வளர்க்கவும் தூண்டுதல் அளிக்கும் முயற்சி இது.

**பின்னிணைப்பு A**

**தமிழ் மொழி விழா 2023 – முக்கிய வடிவச்சின்னம்**

பின்னிணைப்பு B

தமிழ் மொழி விழா 2023

Tamil Language Festival

1 – 30 April

தமிழை நேசிப்போம், தமிழில் பேசுவோம்

பின்னிணைப்பு B

***பின்னிணைப்பு B-ல் உள்ள தகவல்கள், படங்கள் அனைத்தையும் சனிக்கிழமை, 1 ஏப்ரல் 2023, இரவு 11 மணிக்கு முன்னதாக வெளியிடக்கூடாதென தடை விதிக்கப்பட்டுள்ளது.***

சனிக்கிழமை, 1 ஏப்ரல் 2023 அன்று நடைபெறவிருக்கும் தமிழ் மொழி விழா அதிகாரபூர்வத் தொடக்க நிகழ்ச்சியில், *அன்பு* (ஆண்), *அழகு* (பெண்) ஆகிய இரு உருவச்சின்னங்களை வளர்தமிழ் இயக்கம் அறிமுகப்படுத்துகிறது.

பரிவு, அரவணைப்பு, நேசம் அனைத்தையும் உள்ளடக்கியது *அன்பு* (ஆண்). தமிழ் பேசும் அனைவரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, மரியாதையுடன் பேசிப்பழக *அன்பு* தூண்டுகோலாகத் திகழ்கிறது.

தமிழ் மொழியின் அழகைப் போற்றிக் கொண்டாடி, அனைத்து வயதினரும் தமிழைக் கற்றுக்கொள்ளவும் பேசவும் ஊக்கம் தருகிறது *அழகு* (பெண்).

*அன்பும் அழகும்* 3000ஆம் ஆண்டிலிருந்து வந்திருக்கும் காலப்பயணிகள். தமிழ் மொழி நம் கற்பனைக்கு எட்டாத அளவுக்கு வளம்பெற்றுத் திகழும் காலத்திலிருந்து அவர்கள் வந்திருக்கிறார்கள். இன்றைய இளைய தலைமுறையினர் பல்வேறு தமிழ் மொழி விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவும், தமிழ் மொழியின் உயர்வை உணரவும் ஊக்கம் தருவதற்காக அவர்கள் நிகழ்காலத்திற்கு வந்திருக்கிறார்கள்.

*அன்பும் அழகும்* தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் மொழி விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள். அவர்களுடன் படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!



**பின்னிணைப்பு C**

***பின்னிணைப்பு C-ல் உள்ள தகவல்கள் அனைத்தையும் சனிக்கிழமை, 1 ஏப்ரல் 2023, இரவு 11 மணிக்கு முன்னதாக வெளியிடக்கூடாதென தடை விதிக்கப்பட்டுள்ளது.***

வளர்தமிழ் இயக்கம், சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தின் தமிழ்மொழி ஆர்வத்தையும், தமிழ்ப் பயன்பாட்டில் அவர்களுக்குள்ள தன்னம்பிக்கையையும் எடுத்துக்காட்டக்கூடிய ஒரு தமிழ் வாழ்த்துப் பாடலைத் தயாரிக்க விரும்புகிறது.

இதற்காக, தமிழ் வாழ்த்துப் பாடல் எழுதும் போட்டிக்கு வளர்தமிழ் இயக்கம் ஏற்பாடு செய்யும். பொதுமக்கள் நமது உள்ளூர் சூழலுக்குப் பொருந்தும் தமிழ் வாழ்த்துப் பாடலை எழுதி அனுப்பிவைக்க அழைப்பு விடுக்கப்படும்.

இப்போட்டி 1 ஏப்ரல் 2023 தேதி தொடங்கும். தமிழ் மொழி விழா தொடக்க நிகழ்ச்சியில் விவரங்கள் அறிவிக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்படும் பாடல் வரிகளுக்கு இசையமைக்கப்படும். இறுதிவடிவம் பெறும் தமிழ் வாழ்த்துப் பாடல், 2024ஆம் ஆண்டு தமிழ் மொழி விழாவில் வெளியிடப்படும்.

**முக்கிய தேதிகள்**

| | |
|---|---|
| பாடல் வரிகள் சமர்ப்பிப்பு | 1 ஏப்ரல் 2023 – 30 ஜூன் 2023 |
| மதிப்பீடு | 10 ஜூலை 2023 – 10 ஆகஸ்ட் 2023 |
| வெற்றியாளர்(கள்) அறிவிப்பு | 31 ஆகஸ்ட் 2023 |
| பாடல் வெளியீடு | 31 மார்ச் 2024 |

தமிழ் வாழ்த்துப் பாடல் எழுதும் போட்டி பற்றிய மேல்விவரங்களுக்கும் நிபந்தனைகள், விதிமுறைகள் ஆகியவற்றுக்கும், அன்புகூர்ந்து www.tamil.org.sg இணையத்தளத்தை நாடுங்கள்.